களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p548-560** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# பெரிய புராணத்தில் பண்பாடு: ஒரு விரிவான ஆய்வு

Culture in Periya Puranam: A Comprehensive Study

**முனைவர் கு. கவிதவள்ளி**,
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ மதி இந்திரா காந்தி கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது, திருச்சி -2

**Dr.G.Kavithavalli***,
*Assistant professor, Department of Tamil, Shrimathi Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli–2. Tamil Nadu, India*
*Email: kavithavalli@sigc.edu, ORCiD: 0009-0004-7284-9166*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 27-08-2026
**Published: 28-08-2026**
*Corresponding Author
Email:
kavithavalli@sigc.edu

**Abstract:** A human being attains distinction through the finest qualities within them — love, grace, truthfulness, purity, reconciliation, broad-mindedness, generosity, and modesty — all of which form the foundation of human relationships. Culture is the outward expression of the inner disposition that underlies a good life, and it is distinct from civilization: civilization refers to external/material progress, while culture refers to inner development. This refined state of people's intellectual well-being, moral elevation, ideological soundness, character, and quality of life constitutes culture, and this very state of life is found in the lives of the devotees portrayed in the Periya Puranam. Composed by Sekkizhar, who served as minister to the Chola king Kulottunga II in the twelfth century, this great epic narrates the life stories of the 63 Nayanmars across 4,286 verses. This research paper focuses on six core cultural values — generosity, the habit of giving what is asked for, the quality of forgiveness, hospitality, truthfulness to one's word, and maternal/nurturing virtue — and examines them comparatively against Sangam and post-Sangam literary works such as the Tirukkural, Naladiyar, Purananuru, Kalithogai, and Sirupanarruppadai. The paper further explores the sociological dimension of the Periya Puranam and its relevance to present-day society. Based on secondary data, this study establishes that the cultural values expressed in the Periya Puranam continue to serve as timeless guides for human life.

**Keywords:** *Periya Puranam, Tamil culture, 63 Nayanmars, Sekkizhar, ethical principles, cultural values, generosity and hospitality, Bhakti tradition, comparative study with Sangam literature.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தன்னிடம் உள்ள சிறந்த பண்புகளினாலேயே சிறப்பிடம் பெறுகிறான். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையாக அமைகின்றன. சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாடே பண்பாகும். நாகரிகம் என்பது வேறு; பண்பாடு என்பது வேறாகும். நாகரிகம் என்பது புற வளர்ச்சியைக் குறிக்கிறது; பண்பாடு என்பது அக வளர்ச்சியைக் குறிக்கிறது. மக்களின் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம் ஆகியவை மேன்மேலும் திருந்திய நிலையே பண்பாடு ஆகும். இத்தகைய வாழ்க்கை நிலையே பெரிய புராணத்தில் இடம்பெறும் அடியவர்களின் வாழ்வில் காணப்படுகிறது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராக விளங்கிய சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்ட இப்பெருங்காப்பியமான பெரியபுராணம், 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை நான்காயிரத்து இருநூற்று எண்பத்தாறு (4286) செய்யுள்களில் விவரிக்கின்றது. இவ்வாய்வுக் கட்டுரை, ஈகை, கேட்டதைக் கொடுக்கும் இயல்பு, மன்னிக்கும் பண்பு, விருந்தோம்பும் பண்பு, வாக்குத் தவறாமை, தாய்மைப் பண்பு ஆகிய ஆறு முதன்மைப் பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டு, அவற்றை திருக்குறள், நாலடியார், புறநானூறு, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை ஆகிய சங்க-பிற்சங்க இலக்கிய நூல்களுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. மேலும், பெரியபுராணத்தின் சமூகவியல் பரிமாணத்தையும், அது இன்றைய சமூகத்திற்கு அளிக்கும் பொருத்தப்பாட்டையும் இக்கட்டுரை விரிவுபடுத்தி நோக்குகிறது. இரண்டாம்நிலைத் தரவு அடிப்படையிலான இந்த ஆய்வு, பெரியபுராணத்தில் வெளிப்படும் பண்பாட்டு விழுமியங்கள் காலம் கடந்தும் மனித வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்குகின்றன என்பதை நிறுவுகிறது.

**முதன்மைச் சொற்கள்:** *பெரியபுராணம்; தமிழ் பண்பாடு; 63 நாயன்மார்கள்; சேக்கிழார்; அறநெறிகள்; பண்பாட்டு விழுமியங்கள்; ஈகை மற்றும் விருந்தோம்பல்; பக்தி நெறி; சங்க இலக்கிய ஒப்பாய்வு.*

## 1. முன்னுரை

ஒழுக்கம், நீதி, அறம், நேர்மை முதலியவற்றின் கூட்டே பண்பாடு என்பர். மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் ஏற்றுக் கொண்ட கருவிகள், சமூக பழக்கவழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர். கலித்தொகைப் பாடல் ஒன்று, "பண்பெனப்படுவது பாட றிந்து ஒழுகுதல்" என்கிறது. பண்பாடுகளைச் சமூகத்தில் நிலைநாட்டுவதே

ஒரு நல்ல இலக்கியமாகும். அந்த வகையில், சேக்கிழார் அவர்கள் பெரியபுராணத்தில் வருகின்ற ஒவ்வொரு நாயன்மார்களின் வாழ்விலும் அரிய சிறந்த பண்புகளை வெளிப்படுத்துகிறார். விருந்தோம்பும் பண்பு, கேட்டதைக் கொடுக்கும் பண்பு, தவறு செய்தவர்களை மன்னிக்கும் இயல்பு, சொன்ன சொல் தவறாமை, தாய்மைப் பண்பு, பெரியவர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளல், ஈகைப் பண்பு போன்ற இன்னும் பல பண்பு நலன்களை ஒவ்வொரு அடியார்களிடமும் காணமுடியும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணம், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த பதினொரு பாடல்களைக் கொண்ட திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி இயற்றிய தொண்ணூறு பாடல்களைக் கொண்ட திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய இரு மூல நூல்களை அடிப்படையாகக் கொண்டு, சேக்கிழார் பல ஊர்களுக்குச் சென்று திரட்டிய தகவல்களுடன் இயற்றப்பட்டது. இது தொண்டர் புராணம் என்றும், திருத்தொண்டர் புராணம் என்றும் வழங்கப்படுகிறது. பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக இது இடம்பெற்றுள்ளது. ஈழத்திலும் தமிழகத்திலும் நடைபெற்ற பல்வேறு கல்வெட்டு, நாட்டுப்புற பாடல் ஆய்வுகளின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. ஆய்வு நோக்கமும் முறையியலும்

### *2.1. ஆய்வு நோக்கம்*

பெரியபுராணத்தில் இடம்பெறும் 63 நாயன்மார்களின் வாழ்வில் வெளிப்படும் பண்பாட்டு விழுமியங்களை அடையாளம் கண்டு, அவற்றைச் சங்க இலக்கிய மற்றும் பிற்சங்க இலக்கிய நூல்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். மேலும், இப்பண்பாட்டு விழுமியங்களின் சமூகவியல் முக்கியத்துவத்தையும், இன்றைய கால கட்டத்திற்கான அவற்றின் பொருத்தப்பாட்டையும் மதிப்பிடுவது இவ்வாய்வின் இணை நோக்கமாகும்.

### *2.2. ஆய்வு முறையியல்*

இவ்வாய்வு இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேக்கிழாரின் பெரியபுராணம், திருக்குறள், நாலடியார், புறநானூறு, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை ஆகிய மூல நூல்களும், இவை தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்விதழ் கட்டுரைகள், ஆய்வுநூல்கள் ஆகியவும் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உரையாய்வு (Textual Analysis) மற்றும் ஒப்பாய்வு (Comparative Method) முறைகள் இணைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. பெரியபுராணம்: இலக்கியப் பின்னணி

சைவ சமயத்தின் அடிப்படை நூல்களுள் ஒன்றான பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அரசவையில் முதன்மை அமைச்சராகப் பணியாற்றியவர். சோழ மன்னன் சீவகசிந்தாமணி எனும் காமரசம் மிகுந்த சமண நூலைப் படிப்பதைத் தவிர்த்து, மன்னனையும் மக்களையும் நல்வழிப்படுத்தும் நோக்கில், சிவபெருமானின் அடியார்களான அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை விளக்கும் பெரியபுராணத்தை இயற்றினார் என்பது வரலாற்றுக் குறிப்பு. திருத்தொண்டர் புராணம் இல்லாவிடில் நாயன்மார்களின் வரலாறுகளை விளக்கமாக அறிய இயலாது என்பது ஆய்வாளர்களின் துணிபு.

பெரியபுராணம் வெறும் சமய நூல் மட்டுமன்று; அது தமிழ்ச் சைவர்களின் சமயம், மொழி, வாழ்வியல் நெறிகள், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை ஏந்திய கருவூலமாகவும் திகழ்கிறது. கைமாறு கருதாமல் பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துவதே உண்மைப் பக்தி என்று சேக்கிழார் இந்நூல் வழி நிறுவுகிறார். நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய பக்தி நெறியை வரலாற்றுச் சான்றாகப் பதிவு செய்யும் இப்பெருங்காப்பியம், சமூகத்தில் உயர்வு தாழ்வு பாராமல் அனைத்து அடியார்களையும் "ஐயர்" எனும் மரியாதைப் பெயரால் அழைக்கும் பாங்கின் வழி, ஒரு சமூகச் சமத்துவக் காப்பியமாகவும் விளங்குகிறது.

### 4. பண்பாடு எனும் கருத்தாக்கம்

நாகரிகம் என்பது வேறு; பண்பாடு என்பது வேறாகும். நாகரிகம் என்பது புற வளர்ச்சியைக் குறிக்கிறது; பண்பாடு என்பது அக வளர்ச்சியைக் குறிக்கிறது. மக்களின் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம் ஆகியவை மேன்மேலும் திருந்திய நிலையே பண்பாடு ஆகும். மானுடவியல் நோக்கில் நோக்கும்போது, பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், மதிப்பீடுகள், பழக்கவழக்கங்கள், கலை இலக்கியம் ஆகியவற்றின் தொகுப்பாக விளங்குகிறது. இத்தகைய வாழ்க்கை நிலையே பெரிய புராணத்தில் இடம் பெறும் அடியவர்களின் வாழ்வில் காணப்படுகிறது.

### 5. பெரியபுராணத்தில் பண்பாட்டு விழுமியங்கள்

நாயன்மார்கள் அனைவருமே ஈகை, கொடை, மன்னிக்கும் பண்பு, விருந்தோம்பல், வாக்குத் தவறாமை, தாய்மைப் பண்பு போன்ற பல்வேறு பண்பு நலன்களை வாழ்ந்து காட்டியவர்கள். இத்தலைப்பின் கீழ் அவற்றை ஒவ்வொன்றாக ஆய்வு செய்யலாம்.

### *5.1. ஈகைப் பண்பு*

நாயன்மார்கள் அனைவருமே ஈகைப் பண்போடு விளங்கினர். சிவனடியார்கள் எதனைக் கேட்டாலும் அவனைக் கொடுப்பார்கள். மேலும் தன்னிடம் மிகுந்த செல்வம் இருந்தாலும் சரி, அது குறைந்தாலும் சரி, வறுமையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் உதவி செய்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

நரசிங்க முனையரைய நாயனார் சிவனுக்கு உகந்த திருவாதிரை நாள்தோறும் சிறப்பாகவும் நிறைவாகவும் வழிபாட்டைச் செய்து, திருநீறு அணிந்த தொண்டராக வந்தவர்களுக்கெல்லாம் குறைவில்லாமல் நூறு பசும்பொன்னைக் கொடுத்து இனிய திரு அமுதினையும் வழங்கினார்.

*" ஆறணிந்த சடைமுடியார்க்*

*காதிரைநாள்தோறும் என்றும்*

*வேறு நிறை வழிபாடு*

*விளங்கிய பூசனை மேவி*

*நீறணியும் தொண்டர் அணைந்*

*தார்க்கெல்லாம் நிகழ் பசும்பொன்*

*நூறு குறையாமல் அளித்*

*தின்னமுதும் நுகர்விப்பார் "*

என்ற பாடல் அடிகள் மூலம் மேற்கண்ட செய்தியினை அறியலாம். இதனையே வள்ளுவர்,

*" வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்*

*குறி எதிர்ப்பை நீரது உடைத்து " என்கிறார்.*

*" ஏற்ற கைம்மாற்றாமை என்னானும் தாம் வரையாது*

*ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண் கடன் ஆற்றின்*

*மலி கடல் தண்சேர்ப்ப மாறு ஈவார்க்கு ஈதல்*

*பொலிக் கடன் என்னும் பெயர்த்து "*

என்ற நாலடியார் பாடல், எதிர் உதவி ஏதும் எதிர்பார்க்காது வறிஞர்க்கு இயன்றதை மாறாமல் உதவுவதே ஆண் மகனின் கடமை என விளக்குகிறது. இவ்வாறு திருக்குறளும் நாலடியாரும் முன்வைக்கும் ஈகைக் கொள்கையுடன் பெரியபுராணம் காட்டும் நாயன்மார்களின் ஈகை வாழ்வு நேரடித் தொடர்பு கொண்டிருப்பது, சங்கம் மருவிய காலத் தமிழ்ச் சமூகத்தில் ஈகை என்பது ஒரு தனிமனித நற்பண்பாக மட்டுமின்றி, சமூகக் கடமையாகவும் கருதப்பட்டதை உணர்த்துகிறது.

### *5.2. கேட்டதைக் கொடுக்கும் இயல்பு*

நாயன்மார்கள் ஒவ்வொருவரும் அடியவர்கள் எதனைக் கேட்டாலும் அதனைச் சிறிதும் தயக்கமின்றிக் கொடுக்கும் மன இயல்பு உடையவர்களாக விளங்கினார்கள். இயற்பகை நாயனார் தனது மனைவியை முதிய வேதியர் தன்னுடன் அனுப்புமாறு கேட்டவுடன் உடனே அனுப்பினார்.

சிறுதொண்ட நாயனார் தன்னைத் தேடி வந்த அடியவர் பிள்ளைக்கறி சமைத்துத் தருமாறு கேட்க, தன்னுடைய குழந்தை சீராளனைத் தானே சமைத்து உணவாக அளித்தார். மான கஞ்சாற நாயனார் தன் மகளின் திருமணத்தின் போது கூந்தலைக் கேட்ட அடியவருக்கு அழகிய கூந்தலை அரிந்து கொடுத்தார்.

*" அருள் செய்த மொழி கேளர்*
*அடற் சுரிகை தனையுருவிப்*
*பொருள் செய்தா மெனப்பெற்றேன்*
*எனக்கொண்டு பூங்கொடி தன்*
*இருள் செய்த கருங்கூந்தல்*
*அடியிலரிந் தெதிர் நின்ற*
*மருள் செய்த பிறப்பறுப்பார்*
*மலர் கரத்தினிடை நீட்ட "*

என்ற வரிகள் இக் கருத்தினை மெய்ப்பிக்கின்றன. சிறுபாணாற்றுப்படையில் நல்லிய கோடன் தன்னை நாடிவரும் பாணர், கூத்தர், விறலியோர் போன்றோருக்குப் பரிசினை வாரி வழங்கும் இயல்பினைக் கொண்டுள்ளான்.

*" செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்,*
*இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்*
*செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த "*

இனிய முகத்தை உடையவனாக அறிஞர்கள் பலரும் புகழும் வண்ணம் கொடைத்தன்மையோடு வாழ்ந்தான் நல்லிய கோடன். சங்க இலக்கியத்தில் காணப்படும் இக்கொடைத்தன்மை, பெரியபுராணத்தில் நாயன்மார்களின் வாழ்வில் இன்னும் ஆழமான, தன்னலமற்ற தியாக வடிவமாக மாறுவதைக் காணமுடிகிறது.

### *5.3. மன்னிக்கும் பண்பு*

மெய்ப்பொருள் நாயனார் முப்பொழுதும் திருக்கோயில் வழிபாடு செய்வார். சிவனடியார் திருவடியைத் தொழுது வாழ்ந்து வந்தார். அன்பு உள்ளத்தோடு அடியவர்களுக்கெல்லாம் ஒரு சிறிதும் குறைவில்லாமல் வேண்டுவன தருபவர். முத்திநாதன் என்ற மன்னன் இவரைப் போரில் வெல்ல முடியாமல் சூழ்ச்சியால் வெல்ல நினைத்தான். தவ வேடம் பூண்டு உடம்பெல்லாம் திருநீறு பூசி, வாளைத் தன் ஆடையில் மறைத்துக் கொண்டு அவரைக் காணச் சென்றான். அரண்மனைக்குச் சென்று மெய்ப்பொருள் நாயனாரை வெட்டினான்.

தத்தன் உடனே தன் வாளை உருவி வெட்ட முயன்றான். ஆனால் நாயனாரோ, "தத்தா, நமர்" என்று கூறி இவரை யாதொரு இடையூறும் இன்றி நீ துணையாகச் சென்று விட்டு வருக என்றார்.

*" வேதனை எய்தி வீழ்ந்த*
*வேந்தரால் விலக்கப்பட்ட*
*தாதனாற் தத்தன் தானும்*
*தலையினால் வணங்கி தாங்கி*
*யாது நான் செய்கேனென்ன*
*எம் பிராட்டியார் போக*
*மீதிடை விலக்கா வண்ணம்*
*கொண்டு போய் விடுநீயென்றார் "*

என்ற பாடல் அடிகள் மெய்ப்பொருள் நாயனாரின் மன்னிக்கும் பண்பினை வெளிப்படுத்துகிறது. மெய்ப்பொருள் நாயனார் தம்மைக் கொன்ற பகைவரையும் பொறுத்ததற்குக் காரணம், தாம் வழிபடும் இறைவனின் தொண்டரைப் போலத் தலைவர் இருந்த தோற்றத்தாலே ஆகும். இதனையே நாலடியார் பாடல்,

*" நேரல்லார் நீரல்ல சொல்லியக் கால் மற்றது*
*தாரித் திருத்தல் தகுதி மற்றும் ஓரும்*
*புகழ்மையாக கொள்ளாது பொங்குநீர் ஞாலம்*
*சமழ்மையாக் கொண்டுவிடும் "*

என்று விளக்குகிறது. நற்குணம் இல்லாதவர் பண்பற்ற சொற்களை சொல்லும்போதும், பண்பற்ற செயல்களைச் செய்யும் போதும் அதனைப் பொறுத்துக் கொண்டிருப்பதே தகுதியாகும் என்கிறது

இப்பாடல். மன்னிக்கும் பண்பு என்பது தனிமனித அளவில் மட்டுமின்றி, சமூக அமைதிக்கும் ஒற்றுமைக்கும் இன்றியமையாத ஒரு பண்பாட்டு விழுமியமாக பெரியபுராணம் முன்வைக்கிறது.

### *5.4. விருந்தோம்பும் பண்பு*

நாயன்மார்கள் அனைவரும் வறியவர்களுக்கும் அடியவர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் தன்மை உடையவர்களாகவும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கும் குணம் படைத்தவர்களாகவும் விளங்கினர். இளையான்குடி மாறனார், காரைக்கால் அம்மையார், சிறுதொண்ட நாயனார், அப்பூதி அடிகளார் போன்றோர் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியவர்கள். திருநீலகண்ட நாயனார் இறைவனின் திருவடியை வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர். பொய்களைக் கடிந்து அறம் புரிபவர். சிவபெருமானுடைய மெய்யடியவர்களுக்குத் திருத்தொண்டுகளை அன்புடன் செய்பவர். சைவ நலத்தைத் தன்னலமாகப் பேணும் தகைமை உடையவர். சிவனடியார்களுக்குத் திருவோடு வழங்குபவர்.

இளமையின் மிகுதியால் இவர் பிழை செய்ய, மனைவியார் உடன் இல்லத்தில் இருவரும் இணையாது வாழ்ந்து வந்தனர். சிவபெருமான் அடியார் வடிவில் வந்து திருவோடு தர இல்லத்திற்கு வந்தார். அவ்வாறு தன் வீட்டிற்கு வந்த அடியவரைத் திருநீலகண்டர் அவருடன் சிறிது தூரம் சென்று வழி அனுப்பிப் பின் மீண்டார். இறைவரும் தம் திருவம்பலத்தை அடைந்தார்.

*"வைத்த பின் மறையவராகி வந்தருள*
*நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்*
*உய்த்துடன் போய் விடைக் கொண்டு மீண்டனர்*
*அத்தர் தாம் அம்பல மணைய மேவினார் "*

என்ற வரிகள் அன்றைய சமூகத்தில் விருந்தினரை வழி அனுப்பி விடை தந்தனர் என்பதை உணர்த்துகின்றன. தமிழ் மரபில் "விருந்தோம்பல்" என்பது இல்லறத்தின் நான்கு அறங்களுள் ஒன்றாகத் திருக்குறள் முன்வைத்துள்ளதுடன், பெரியபுராணத்திலும் இது பக்தி நெறியுடன் இணைந்த ஒரு உயர்ந்த சமூகக் கடமையாகச் சித்தரிக்கப்படுகிறது.

### *5.5. வாக்குத் தவறாமை*

பெரியபுராணம் காட்டும் சமுதாய மக்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என விரும்பினர். வாக்கு தவறுவது தன் பண்பாட்டுக்கு இழுக்கு என கருதினர். 63 நாயன்மார்களில் ஒருவரான திருக்குறிப்புத் தொண்டர் சிவன் அடியார்களின் துணியைத் துவைத்துக் கொடுக்கும் பணியைச் செய்து வந்தார். ஒரு சமயம் சிவபெருமான் அடியவர் வேடம் புனைந்து வந்து அவரிடம் தன் துணியைத்

துவைத்துத் தருமாறு கேட்டார். திருக்குறிப்பு தொண்டரும் நாளை வந்து வாங்கிக் கொள்ளச் சொன்னார். ஆனால் தொடர்ந்து மழை பெய்த காரணத்தினால் அவரால் துணியை உலர்த்த இயலவில்லை. அடியவருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போனதற்கு மிகவும் வருந்தி, தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றார். குறிப்பிட்ட காலத்திற்குள் தனது கடமையைச் செய்ய முடியாத காரணத்தினால் உயிரையே மாய்த்துக் கொள்ள முடிவெடுத்த அவரது வாக்கு தவறாமைப் பண்பு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

*" கந்தை புடைத் திட எற்றுங்*

*கற்பாறை மிசைத் தலையைச்*

*சித்தவெடுத் தெற்றுவன் என்*

*றணைந்து செழும் பாறைமிசைத்*

*தந்தலையை புடைத்தெற்ற "*

என்ற பெரிய புராண அடிகள் இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றன. புறநானூற்றுப் பாடல்களில் அரசர் மற்றும் வீரர்களின் சிறப்பாகச் சொன்ன சொல் தவறாமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

*" ஒரு வழிப்படுதல் உள்ளார் .... சொல் தவறார்.... "*

என்ற அடிகள் கொடுத்த வாக்கை மாற்றாமல் காப்பது அரசனின் சிறந்த பண்பாகக் கருதப்பட்டது என்பதை உணர்த்துகின்றன. சங்க கால அரசியல் தலைமைப்பண்பாக விளங்கிய வாய்மை, பக்தி இலக்கிய காலத்தில் இறையடியார்களின் ஆன்மிக விழுமியமாக மாறியிருப்பது, தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சியை உணர்த்தும் சான்றாகும்.

### *5.6. தாய்மைப் பண்பு*

தாய்மைப் பண்பு என்பது அன்பு, கருணை, பாதுகாப்பு, தியாகம், பொறுமை, குழந்தையின் நலனில் அக்கறை போன்ற உயர்ந்த பண்புகளின் தொகுப்பாகும். திண்ணன் என்னும் கண்ணப்பன் ஒரு வேடர் குலத்தில் பிறந்தவன். உயிர்களைக் கொல்லும் தொழிலைச் செய்தாலும் மற்றவர்களிடம் அன்பு காட்டுவதில் குறைவில்லாமல் இருந்தான். மலைக்கு வேட்டையாட சென்ற போது அங்குக் காளத்தியப்பரைக் கண்டான். அந்த இறைவன் யாருமின்றித் தனிமையில் இருப்பதைக் கண்டு மனம் உருகினான். ஒரு கையில் இறைச்சியை எடுத்துக்கொண்டு, வாயில் மஞ்சன நீரை வைத்துக் கொண்டு, மாலையைத் தலையில் சுமந்து கொண்டு விரைந்து ஓடினான். அவரைத் தனியே விட்டு இறங்கி வர மனம் இல்லாமல், தாயன்போடு ஒரு குழந்தையைப் போல் அவரைக் கண்டான். இறைவனின் கண்ணில் ரத்தம் வருவதைக் கண்ட அவன் தன் கண்ணைத் தோண்டி இறைவனின் கண்ணில் அப்பினான்.

*" இதற்கினி என் கண் அம்பால்*

*இடந்தப்பின் எந்தை யார் கண்*

*அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்*

*நிற்கவும் அடுக்குமென்று*

*மதர்த்தெழும் உள்ளத்தோடு*

*மகிழ்ந்து முன்னிருந்து தங்கண்*

*முதற்சர மருந்து வாங்கி*

*முதல்வர் தங் கண்ணில் அப்ப "*

என்ற பெரிய புராண வரிகள் கண்ணப்பனாரின் தாய்மைப் பண்பை நிரூபிக்கின்றன. கலித்தொகையில் தாய்மை உணர்வை வெளிப்படுத்துவதாக ஒரு பாடல் அமைகிறது.

*" வழிமுறைத் தாய் உழைப்*

*புக்காருற்கு அவளும்*

*மயங்கு நோய் தாங்கி மகன் எதிர் வந்து*

*முயங்கினள் முத்தினள்*

*நினக்கு யாம் யாரேம் ஆகுதும்? "*

என்ற அடிகள் தன் கணவனின் மகனைக் கண்டவுடன், தாயுரிமை இல்லாத நிலையிலும் அவனைத் தழுவி முத்தமிடும் பெண்ணின் செய்கை வழியாகத் தாயன்பு, பாசம், பரிவு ஆகிய தாய்மைப் பண்புகள் வெளிப்படுகின்றன. கண்ணப்பனாரின் ஆண்பாலான தாய்மை, தாய்மை என்பது உயிரியல் பாலினத்தால் மட்டும் வரையறுக்கப்படாத, அன்பும் தியாகமும் நிறைந்த ஒரு உளவியல் நிலை என்பதை உணர்த்துகிறது.

## 6. பெரியபுராணமும் சங்க இலக்கியமும்: ஓர் ஒப்பாய்வு

மேற்கண்ட ஆறு பண்பாட்டு விழுமியங்களையும் நோக்கும்போது, பெரியபுராணத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பண்பும் திருக்குறள், நாலடியார், புறநானூறு, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்களில் ஏற்கெனவே வேரூன்றியிருந்த தமிழ்ப் பண்பாட்டு மரபின் தொடர்ச்சியாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் ஈகை, கொடை, வாய்மை போன்ற பண்புகள் மன்னர்களுக்கும் வீரர்களுக்கும் உரிய அரசியல்-சமூக விழுமியங்களாக முன்வைக்கப்பட்டன. ஆனால் பக்தி இலக்கியமான பெரியபுராணத்தில் இதே பண்புகள் சாதி, குலம்,

பொருளாதார நிலை என்ற வேறுபாடின்றி, அனைத்து நாயன்மார்களின் வாழ்விலும் இறைபக்தியின் வெளிப்பாடாக மாற்றமடைந்திருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறு, சங்க கால மனிதநேயப் பண்புகள் பக்தி இலக்கியக் காலத்தில் ஆன்மிகப் பரிமாணம் பெற்று, தனிமனித நன்னடத்தையிலிருந்து சமூக சமத்துவக் கொள்கையாக விரிவடைந்திருப்பது தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் ஒரு முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில், பெரியபுராணம் தொடர்பான சமீபத்திய ஆய்விதழ் கட்டுரைகளும், கைமாறு கருதாத அன்பே உண்மைப் பக்தி என்று சேக்கிழார் வரையறுத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

## 7. பெரியபுராணத்தின் சமூகவியல் பரிமாணம்

பெரியபுராணத்தின் மற்றொரு முக்கியப் பண்பாட்டுப் பரிமாணம் அதன் சமூக சமத்துவப் பார்வையாகும். இன்று உயர் வகுப்பினரைக் குறிக்கும் சொல்லாக்கமாகக் கருதப்படும் "ஐயர்" எனும் சொல்லால், பெரியபுராணத்தில் அடித்தட்டு மக்களாகக் கருதப்பட்ட, ஆனால் சிவனருளால் உயர்ந்த பெருமக்களை, அந்தணரும் அரசரும் அழைப்பதாகச் சேக்கிழார் காட்டுகிறார். இதன் வழி, பக்தி நெறி மூலம் சாதி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒன்றிணையும் ஒரு சமூக அமைப்பை பெரியபுராணம் முன்மொழிகிறது என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

மேலும், பெரியபுராணத்தில் இடம்பெறும் பல்வேறு வாழ்வியல் சடங்கு முறைகள் குறித்த சமீபத்திய ஆய்வுகள், நாயன்மார்கள் தங்கள் அன்றாட வாழ்வில் பின்பற்றிய வழிபாட்டு முறைகள், விழாக்கள், சடங்குகள் ஆகியவை தமிழ்ச் சைவ சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை வலுப்படுத்தியதாகச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு பெரியபுராணம் ஒரு சமய நூலாக மட்டுமின்றி, பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வியலைப் பிரதிபலிக்கும் ஒரு சமூக ஆவணமாகவும் திகழ்கிறது.

## 8. இன்றைய சமூகத்திற்கான பொருத்தப்பாடு

நவீன காலத்தில் பொருளாதார வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் மனித வாழ்வை மேம்படுத்தியிருந்தாலும், அன்பு, பகிர்தல், மன்னித்தல், வாக்குப் பிறழாமை போன்ற உளப்பாங்குகள் பலவீனமடைந்து வருவதாகச் சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இத்தகைய சூழலில், பெரியபுராணம் முன்வைக்கும் ஈகை, விருந்தோம்பல், மன்னிக்கும் பண்பு, வாக்குத் தவறாமை, தாய்மைப் பண்பு போன்ற விழுமியங்கள் இன்றைய சமூகத்திற்கும் மிகவும் பொருத்தமானவையாக விளங்குகின்றன.

குடும்ப அமைப்பு, பள்ளி-கல்லூரி கல்வி, பொது வாழ்க்கை ஆகிய தளங்களில் இப்பண்பாட்டு விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சமூக நல்லிணக்கத்தையும் மனித மேம்பாட்டையும் மேலும் வலுப்படுத்த முடியும். இவ்வகையில், பெரியபுராணம் என்பது வெறும் இலக்கிய-சமய நூல் மட்டுமன்று; அது காலம் கடந்தும் பொருந்தும் ஒரு வாழ்வியல் கையேடாகவும் திகழ்கிறது என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

## 9. முடிவுரை

இதுகாறும் நோக்கியவற்றால் பண்பாடு என்பது ஒழுக்கம், நீதி, நேர்மை, அறம் முதலியவற்றின் கட்டுப்பாடே என அறியமுடிகிறது. மனிதர்கள் பண்பாடு என்பதை மனிதனால் உருவாக்கப்பட்ட அறிவு, மரபு, பழக்கவழக்கங்கள் என்று வரையறுக்கிறார்கள். ஈகைப் பண்பு, கேட்டதைக் கொடுக்கும் இயல்பு, மன்னிக்கும் பண்பு, விருந்தோம்பும் பண்பு, வாக்குத் தவறாமை, தாய்மைப் பண்பு போன்ற பல பண்புகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. பெரியபுராணத்தில் இடம்பெறுகின்ற 63 நாயன்மார்களின் வாழ்விலும் பல்வேறு வகையான பண்பு நலன்களைக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

மேலும், சங்க இலக்கியத்தில் வேரூன்றியிருந்த இப்பண்பாட்டு விழுமியங்கள் பக்தி இலக்கியக் காலத்தில் ஆன்மிக, சமூக சமத்துவப் பரிமாணம் பெற்று விரிவடைந்திருப்பதையும், இவை இன்றைய சமூகத்திற்கும் வழிகாட்டியாக விளங்கக்கூடியவை என்பதையும் இவ்வாய்வு நிறுவியுள்ளது. எதிர்கால ஆய்வுகள், பெரியபுராணத்தில் இடம்பெறும் பிற நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளையும், அவற்றில் வெளிப்படும் கூடுதல் பண்பாட்டு அம்சங்களையும் ஆராயும் திசையில் மேற்கொள்ளப்படலாம்.

## 10. துணைநூற்பட்டியல் (MLA 9-ஆம் பதிப்பு நடை)

[1.] சுந்தரமூர்த்தி, கு., ஆசிரியர். சேக்கிழார் திருத்தொண்டர் புராணம். ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதினம்.

[2.] பரிமேலழகர், ஆசிரியர். திருக்குறள். பழனியப்பா பதிப்பகம்.

[3.] வேங்கடசாமி நாட்டார், நா. மு., ஆசிரியர். சிறுபாணாற்றுப்படை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[4.] கௌமாரீஸ்வரி, எஸ்., பதிப்பாசிரியர். நாலடியார். சாரதா பதிப்பகம், சாந்தி அடுக்ககம்.

[5.] கேசிகன், புலியூர், ஆசிரியர். புறநானூறு. சாரதா பதிப்பகம், சாந்தி அடுக்ககம்.

[6.] விஸ்வநாதன், அ., ஆசிரியர். கலித்தொகை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[7.] "பெரியபுராணம்." தமிழ் விக்கிப்பீடியா, விக்கிமீடியா அறக்கட்டளை, https://ta.wikipedia.org/wiki/பெரியபுராணம். Accessed 3 Sept. 2026.

[8.] "சேக்கிழார்." தமிழ் விக்கிப்பீடியா, விக்கிமீடியா அறக்கட்டளை, https://ta.wikipedia.org/wiki/சேக்கிழார். Accessed 3 Sept. 2026.

[9.] "பெரிய புராணத்தில் பக்தி (Devotional Norms (Bakthi) Depicted In Periyapuranam Text)." Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்), University of Malaya, https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/view/27709. Accessed 3 Sept. 2026.

[10.] "பெரிய புராணத்தில் வெளிப்படும் வாழ்வியல் சடங்கு முறைகள்: ஓர் ஆய்வு." South Eastern University of Sri Lanka Digital Repository, https://dspace.lib.seu.ac.lk/items/7748617d-3542-4d54-bc25-608ba2c20984. Accessed 3 Sept. 2026.

[11.] "பெரியபுராணம்: இளைஞர் வாழ்வியலுக்கான ஒரு சமுதாயக் காவியம்." தமிழ்ஹிந்து, https://tamilhindu.com/2011/01/periyapuranam-an-epic-for-worldly-prosperous-social-life-of-youths-2/. Accessed 3 Sept. 2026.

## 11. ஆசிரியர் அறிவிப்பு – நலன் முரண்பாடு இல்லாமை

இக்கட்டுரையின் ஆசிரியரான முனைவர் கு. கவிதவள்ளி அவர்கள், இவ்வாய்வுக் கட்டுரை தயாரிப்பில் எவ்விதமான நிதி நலன், தனிப்பட்ட உறவு, அல்லது பிற தொழில்முறை காரணிகளாலும் எந்த நலன் முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என உறுதியாக அறிவிக்கிறார். இக்கட்டுரையின் கருத்துகள் ஆசிரியரின் சொந்த ஆய்வு நோக்கிலும், மேற்கோள் காட்டப்பட்ட நூல்கள் மற்றும் ஆய்விதழ்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் அடிப்படையிலும் வழங்கப்பட்டவையாகும். இக்கட்டுரை இதுவரை வேறு எந்த இதழிலும் வெளியிடப்படவில்லை என்பதையும் ஆசிரியர் உறுதிப்படுத்துகிறார்.

KALANJIYAM